# பொது அறிவிப்பு

மின்சாரம், குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு பெறுவதற்கு உயரமான கட்டிடங்கள்/உயரம் குறைந்த கட்டிடங்கள் மற்றும் பொது உபயோக கட்டிடங்களுக்கு பணி நிறைவுச் சான்று பெற உள்ள விதிகளில் சூரிய ஒளி தகடு பொருத்துதல் குறித்த விதி எண் 22-ன் படி

*'' கட்டிடத்தின் மொத்த மேற்கூரைத்தள வெளி பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியில் சூரிய ஒளித் தகடுகள் பொருத்தப்படவேண்டும். இதற்கென சுமார் 1 KW மின்சாரம் தயாரிக்க 10 ச. மீட்டர் பரப்பளவு உள்ள வெளியிட பரப்பு தேவைப்படும்.''*

கட்டிட உமையாளர்கள் / குடியிருப்பாளர்கள் கட்டிட மேற்கூரைத் தள வெளி பரப்பில் திட்ட அனுமதியில் உள்ளவாறு சூரிய ஒளி தகடுகள் பொருத்தப்பட்டுள்ளதை தவறாது உறுதி செய்துக் கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள். சூரிய ஒளி தகடுகள் பொருத்தப்பட்டு அவற்றின் மூலம் பெறப்படும் மின்சாரம் சொந்த பயன்பாட்டிற்கு உபயோகித்தல் அல்லது மின்சார வாரியத கீரிட்டிற்கு வழங்குதல் குறித்து சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமலாக்க பிரிவு அதிகாரிகளால் அனைத்து கட்டிடங்களிலும் கள ஆய்வு மேற்கொள்ளப்படும். ''

உயரமான கட்டிடங்கள் / உயரம் குறைந்த கட்டிடங்கள் மற்றும் பொது உபயோக கட்டிடங்களில் சூரிய ஒளித் தகடுகள் பொருத்தப்படாமல் இருக்கும் பட்சத்தில் அது மிகவும் கடுமையானதாக கருதப்பட்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57-ன் கீழ் தீவிர அமலாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஒப்பம் 31.8,21

தலைமை திட்ட அலுவலர்

அமலாக்கப் பிரிவு

31/8/2021

31/08/2021

AP (S V)